# மாபெரும் மறு உருவாக்கம்

## (ரோமர் 6)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது எல்லையற்ற முக்கியத்துவம் வாய்ந்த அனுபவங்களின் மறு உருவாக்கத்துடன் தொடங்குகிறது ...*

*வியப்புக்குரிய மறு உருவாக்கங்கள் இன்றைய நாட்களில் சாத்தியமானவைகளாக உள்ளன. ஒரு சக்கரத்தின்மீது விழும் தண்ணீரானது அச்சக்கரத்துடன் இணைக்கப்பட்டுள்ள விசையாழியைச் சுழலச் செய்து, தண்ணீர் சக்தியை மின்சார சக்தியாக மறு உருவாக்கம் செய்கிறது. வெறும் கண்களால் காணக் கூடாதபடிக்கு மிகவும் சிறியவைகளாக உள்ள அணுக்கள், முழு நகரங்களை அழிக்கும் வல்லமையைக் கொண்டுள்ள உட்கரு ஆயுதங்களாக மறு உருவாக்கம் செய்யப்படுகின்றன. ஒரு பெண், தனது முடிக்கு மையிடுவதற்கு ஒரு அழகு நிலையத்திற்கும், தனது மூக்கை நேராக்குவதற்கு ஒரு மருத்துவரிடத்திற்கும், புதிய பற்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பல்மருத்துவரிடத்திற்கும் மற்றும் ஒரு புதிய உருவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு எடைகுறைப்புக் கூடத்திற்கும் செல்ல முடியும். அது என்ன ஒரு மறு உருவாக்கமாக உள்ளது!*

*ஆனால், ரோமர் 6ம் அதிகாரம் மிகவும் வியப்புக்குரிய மறு உருவாக்கத்தைப் பற்றிப் பேசுகிறது. ஒரு நபர், கிறிஸ்தவராகிறபோது, அந்த மாபெரும் மறு உருவாக்கம் நடைபெறுகிறது. அவர் கிறிஸ்தவர் ஆவதற்கு முன்பு, அவர் தேவனுடைய கிருபைக்குப் புறம்பே இருக்கிறார்; ஒரு கிறிஸ்தவராக அவர் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார். முன்பு, அவர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்து போனவராக இருந்தார்; பின்பு அவர் கிறிஸ்துவுக்குள், ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்கிறார். முன்பு, அவர் நித்திய தண்டனைக்குத் தீர்க்கப்பட்டிருந்தார்; பின்பு அவருக்கு, நித்திய ஜீவன் கொடுக்கப்படுகிறது. அவர் தமக்குத்தாமே உதவிசெய்துகொள்ளக் கூடாதவராக இருக்கிறார் என்ற உண்மை நிலையிலும், இந்த மாபெரும் மறு உருவாக்கத்தின் ஆச்சரியமான பண்புக் கூறு நடைபெறுகிறது; அவர் இரட்சிப்பைத் தேவனுடைய கொடை என்ற வகையில் பெற்றார்!*

*ஒருவர் கிறிஸ்தவர் ஆகிறபோது நடைபெறும் மாற்றத்தின் அளவை மதித்து உணர்வதற்கு, பாவம் நிறைந்த மனிதர், பரலோகத்திற்கு ஏற்புடையவராவதற்கு, மாற்றப்பட வேண்டும் என்பதை, நாம் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. நெறிதவறிய, பாவம் நிறைந்த, கீழ்ப்படியாமையிள்ள சாத்தானுடைய பிள்ளையாக உள்ள ஒருவர், அன்புள்ள, நீதியுள்ள மற்றும் கீழ்ப்படிதல் உள்ள, தேவனுடைய பிள்ளையாக மறு உருவாக்கப்படுத்தப்பட வேண்டும். இருந்தபோதிலும் தேவனுடைய கிருபையால், இந்த மறு உருவாக்கமானது நடைபெற முடியும் மற்றும் நடைபெறுகிறது: செலொத்தே என்னப்பட்ட சீமோ*

னும் ஆயக்காரரான மத்தேயுவும், அர்ப்பணிப்புள்ள சீஷர்களாக முடிந்தது; துன்புறுத்தியவரான சவுல், பவுல் என்ற பிரசங்கியாரானார்; “இடிமுழக்கத்தின் மகன்” என்னப்பட்ட யோவான், அன்பின் அப்போஸ்தலராக முடிந்தது. கொரிந்தியர்களில் சிலர், “வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரருமாக” இருந்தவர்கள் “கழுவப்பட்டு ..., பரிசுத்தமான்களாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட” முடிந்தது (1 கொரிந்தியர் 6:9-11) மற்றும் அவர்கள் “தேவனுடைய சபை” என்றும் “பரிசுத்தவான்கள்” என்றும் அழைக்கப்பட முடிந்திருந்தது (1 கொரிந்தியர் 1:2).

ரோமர் 6ம் அதிகாரம், இந்த மறு உருவாக்கத்தைப் பற்றிய மூன்று சத்தியங்களை நமக்குக் கூறுகிறது.

## இந்த மறு உருவாக்கம் என்றால் என்ன?

ரோமர் 6ம் அதிகாரம், இதன் விரிவளவைப் பற்றி விவரிக்கிறது.

*நாம் பாவத்தில் இருந்தோம், ஆனால் இப்போது நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம்.* பவுல், “கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ?” என்று கேட்கிறார், தொடர்ந்து பின்பு, “கூடாதே! பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?” என்று கூடுதலாகக் கூறுகிறார் (ரோமர் 6:1, 2). 11ம் வசனம்கூட, நாம் நம்மை “பாவத்திற்கு மரித்தவர்களாக” கருத வேண்டும் என்று கூறுகிறது. *நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம், ஆனால் இப்போது நாம் பாவத்திலிருந்து விடுதலையாகி இருக்கிறோம்.* நாம் இரட்சிக்கப்பட்டபோது, “பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே” என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 6:6, 7). நாம் “இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு” இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். பிற்பாடு பவுல், ரோமர்கள் “முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்தனர்” என்று கூறுகிறார், ஆனால் அவர்கள் “பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டனர்” என்றும் கூடுதலாக அவர் கூறினார் (ரோமர் 6:17, 18; cf. 6:20, 22).

ரோமர் 6ம் அதிகாரம், நாம் இரட்சிக்கப்படுகிறபோது, நாம் “விடுதலையாக்கப்படுகிறோம்” என்று கூறினாலும் (cf. யோவான் 8:32), நாம் எல்லாவற்றில் இருந்தும் “விடுதலையாகிறோம் என்று அது கூறுவதில்லை. மாறாக நாம், நீதிக்கு அடிமைகள்” ஆனோம் (ரோமர் 6:18) மற்றும் “தேவனுக்கு அடிமைகள்” ஆனோம் (ரோமர் 6:22). உண்மையில், முற்றிலுமான விடுதலை என்று ஒரு விஷயமே இருப்பதில்லை. விடுதலை மற்றும் அடிமைத்தனம் ஆகியவற்றில் ஒன்றை மனிதர்கள் தேர்ந்து கொள்வது இல்லை. மாறாக, அவர்கள் யாருக்கு அடிமையாவது என்பதைத் தேர்ந்து கொள்கின்றனர். சந்தோஷத்திற்காக மாத்திரமே வாழ்கிற மற்றும் தன்னை முற்றிலுமாக விடுதலையானவர் என்று நினைத்துக் கொள்கிறவரான, வாழ்வில் மகிழ்ச்சியே பிரதானம் என்ற கொள்கையை உடைய மனிதர், உண்மையில் தமது இச்சைகளுக்கு அடிமையாக இருக்கிறார்.

ஆனால் யாரேனும் ஒருவர் வியப்படையலாம். பின்பு கிறிஸ்தவர் கொண்டுள்ள அனுகூலம் என்ன? நீங்கள் அடிமையாகவே நிலைத்திருப்பீர்கள் என்றால், பின்பு என் கிறிஸ்தவராக வேண்டும்? பவுல் அந்தக் கேள்வியை முன்னெதிர் நோக்கினார் மற்றும் அதற்குப் பதில் அளித்தார்:

> *பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்போழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (ரோமர் 6:20-23;* cf. *6:16).*

*கிறிஸ்துவைப் பின்பற்றத் தேர்ந்து கொள்வதில், ஒருவர் சகல கட்டுப்பாடுகள் அல்லது அதிகாரங்கள் ஆகியவற்றில் இருந்து முற்றிலுமான விடுதலையைத் தேர்ந்துகொள்வதில்லை, மாறாக, அவர் தேவனுக்கு அடிமையாயிருப்பதைத் தேர்ந்து கொள்கிறார். இப்படிப்பட்ட ஒரு தேர்ந்து கொள்ளுதலை ஏன் மேற்கொள்ள வேண்டும்? அதின் வெகுமதியினிமித்தமாகவே! நீதிக்கு அடிமையாக இருப்பதன் விளைவாக, ஒருவர் நித்திய ஜீவனைப் பெறுகிறார். அவர் பாவத்திற்கு அடிமையாக நிலைத்திருந்தால், அவர் மரணத்தைத் தவிர வேறு எதையும் பெறுவதில்லை! நீங்கள் யாருக்கு அடிமையாக இருப்பதைத் தேர்ந்துகொள்வீர்கள்?*

*ஒரு நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பு, ஆபிரகாம் லிங்கன் என்பவர், அடிமைகளை விடுவிக்கும் விடுதலை அறிவிப்பை வெளியிட்டார். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு, எல்லா மனிதர்களும் பாவத்திலிருந்து விடுதலையாகும் வாய்ப்பை அளித்து, ஆவிக்குரிய விடுதலை அறிவிப்பை வெளியிட்டார்!*

*நாம் நமது பழைய மனுஷசாயலில் இருந்தோம், ஆனால் இப்போழுது நாம் ஒரு புதிய வாழ்வை வாழ்கிறோம்.* பவுல் இந்தக் கருத்தை ஏற்படுத்துகிறார்: ''நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு'' இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறியதற்கு (ரோமர் 6:4), சற்றுப் பின்பு அவர், "நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" என்று கூறுகிறார் (ரோமர் 6:6).

## இந்த மறு உருவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?

ரோமர் 6ல் நாம், இது எவ்வாறு செய்து முடிக்கப்படுகிறது என்பதற்கான *வழியைக்* கண்டு பிடிக்கிறோம்.

*நாம் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம்:* "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோமர் 6:23). இரட்சிப்பு என்பது ஒரு வரமாக உள்ளது; எனவே, இரட்சிப்பு கிருபையினாலேயே உண்டாகி இருக்கிறது

(ரோமர் 3:24ஐயும் காணவும்).

நாம் கிருபையினாலே கிறிஸ்துவின் மூலமாக இரட்சிக்கப்படுகிறோம். தேவன் நமக்கு "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால்" நித்திய ஜீவனை அருளுகிறார் (ரோமர் 6:23). பவுல், "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சய மாமே" என்று கூறுகிறார். நாம் இரட்சிக்கப்படுவதற்குப் போதுமான அளவுக்கு நல்லவர்கள் ஆகும் வரை தேவன் காத்திருக்கவில்லை என்பதைக் கவனியுங்கள்; மாறாக, "நாம் பாவிகளாயிருக்கையில்" அவர், கிறிஸ்துவை நமக்காக மரிக்கும்படி கொடுத்தார்.

இவ்வாறாக, நமது இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவுக்குள் மற்றும் அவர் மூல மாக நிறைவேற்றப்படுகிறது. ரோமர் 6:11, "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறது. எனவே கிறிஸ்துவுக்குப் புறம்பே இரட்சிப்பு இருப்பதில்லை.

விசுவாசத்தினாலே நமது இரட்சிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது: "இவ்வித மாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்" (ரோமர் 5:1). எபேசியர் 2:8ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்."

ஆனால் ரோமர் 6ம் அதிகாரம், நாம் கீழ்ப்படிதல் மூலமாகவும் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் என்பதைத் தெளிவாக்குகிறது. ரோமர் 6:17, 18ஐக் கவனியுங்கள்.

> முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வ மாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

இவ்வசனங்கள், கீழ்ப்படிதலுக்குப் பின்பே இரட்சிப்பு வருகிறது என்று போதிக்கின்றன. பவுல், "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தி னின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என்று கூறுகிறார் (ரோமர் 6:17, 18). முறைமை பின்வருமாறு உள்ளது: முதலாவது, பாவத்திற்கு அடிமைகள்; இரண்டாவது, உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிதல்; மூன்றாவது, பாவத்திலிருந்து விடுதலையாகுதல்; நான்காவது, நீதிக்கு அடிமைகளாயிருத்தல். ரோமர்கள் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் கீழ்ப்படியாத வரையில் இரட்சிக்கப்படவில்லை; அவர்கள் "கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினாலே" (ரோமர் 1:5; 16:26), "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசத்தினாலே" (கலாத்தியர் 5:6) இரட்சிக்கப்பட்டனர்.

அவர்கள் எதற்குக் கீழ்ப்படிந்தனர்? அவர்கள், தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட "உபதேசிக்கப்பட்ட சட்டத்திற்கு" கீழ்ப்படிந்தனர் என்று ரோமர் 6:17 கூறுகிறது.

("போதனையின் மாதிரி"; KJV). அது எதை அர்த்தப்படுத்துகிறது? ரோமர் 6:3-5 அதற்குப் பதில் அளிக்கிறது:

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.

சுவிசேஷமானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைச் சித்தரிக்கிறது. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார் (1 கொரிந்தியர் 15:1-5).

மேலும் புதிய ஏற்பாடும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நமக்குக் கூறுகிறது (2 தெசலோனிக்கேயர் 1:8, 9; 1 பேதுரு 4:17, 18; ரோமர் 10:16).

கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைச் சித்தரிக்கும் சுவிசேஷத்திற்கு ஒருவர் எவ்வாறு கீழ்ப்படிய முடியும்? பதில் பின்வருமாறு: ஞானஸ்நானம் பெறுவதால்! நமது ஞானஸ்நானமானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சித்தரிப்பாக உள்ளது. இருப்பினும், அதைக்காட்டிலும் இன்னும் அதிகமானதாகவும் உள்ளது: நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் கிறிஸ்துவுடன் பகிர்ந்துகொண்டு, அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் அவருடன் ஒன்றிணைக்கப்படுகிறோம் நாம் ஞானஸ்நானம் பெறும்போது, கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெறுகிறோம்; நாம், கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுகிறோம்; மற்றும் நாம் கிறிஸ்துவுடன் உயிர்ப்பிக்கப்படுகிறோம். இவ்வாறாக, நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறோம், மற்றும் அதன்பின்பு - அதற்கு முன்பு அல்ல - நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கப்படுவதற்கு அவசியமானதாக உள்ளது. ரோமர்கள் கீழ்ப்படிந்த

“உபதேச சட்டம்” ஞானஸ்நானத்தை உள்ளடக்கியிருந்தது.

ஞானஸ்நானம் மாத்திரம் இரட்சித்து விடுவதில்லை. ஞானஸ்நானம் விசுவாசத்தில் இருந்து விளைகிறது, மற்றும் விசுவாசம் இல்லாத நிலையில் ஞானஸ்நானம் அர்த்தமற்றதாக உள்ளது (கொலோசெயர் 2:12). ஞானஸ்நானத்திற்கு முன்பு மனந்திரும்புதல் உள்ளது, மற்றும் மனந்திரும்புதல் இல்லாத ஞானஸ்நானம் எதையும் அர்த்தப்படுத்துவது இல்லை (நடபடிகள் 2:38; 17:30). விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாத ஞானஸ்நானம் இரட்சிக்காது. ஆனால் நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள மனவிருப்பம் இல்லாதிருந்தால், விசுவாசமும் மனந்திரும்புதலும் நம்மை இரட்சிக்காது.

## இந்த மறு உருவாக்கத்தின் விளைவுகள் என்னவாக உள்ளது?

இதன் *விளைவுகளை,* ரோமர் 6ம் அதிகாரம் முன்வைக்கிறது.

*மறு உருவாக்கம் என்பது புதிய வாழ்வை விளைவிக்கிறது.* பவுல் நாம் “புதிய ஜீவனுள்ளவர்களாய்” நடந்துகொள்கிறோம் (ரோமர் 6:4), மற்றும் நாம் “பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம்” (ரோமர் 6:11) என்று கூறுகிறார். நாம் கிறிஸ்தவர்கள் ஆகும்போது, தேவனுடைய குடும்பத்திற்குள் தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறக்கிறோம் என்பதே மறை கருத்தாக உள்ளது.

மாபெரும் மறு உருவாக்கமானது, வாழ்வில் ஒரு மாற்றத்தை விளைவிக்கிறது - அல்லது “விளைவித்தாக” - வேண்டும். இருப்பினும், கிறிஸ்தவரின் வாழ்வு மாறுகிறதா அல்லவா என்பது அவரைப் பொறுத்ததாக உள்ளது.

இந்த அதிகாரத்தில் பவுல் தமது உரையைக் கேட்பவர்களுக்கு, தாம் கூறியுள்ளது பற்றிய ஆழ்ந்த சிந்தனையை ஏற்படுத்தும் இரண்டு விவாதங்களின் எதிரெதிர்க் கூற்று ஒன்றை அளிக்கிறார்.

அவர் எதிர்நோக்கும் ஒரு விவாதம் பின்வருமாறு: “நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டு இருப்போமென்றால், நீங்கள் கூறுகிறபடி, பாவம் பெருகும்போது நமக்குக் கிருபை பெருகியுள்ளது என்றால், நீங்கள் கூறுகிறபடி, [ரோமர் 5:20] அதிகமான கிருபை இருக்கும்படிக்கு நாம் அதிகமாய்ப் பாவம் செய்ய வேண்டுமே” (ரோமர் 6:1). இவ்விதமான கூற்றை ஏற்படுத்துவதற்கு அவர்களின் நோக்கமானது, உண்மையில் மாபெரும் பாவம் செய்வதை முன்மொழிதலாக இருந்திராது, ஆனால் நியாயப்பிரமாணத்தினால் அல்ல, கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்ற பவுலின் வலியுறுத்துதல் தவறானதாக இருக்க வேண்டும் என்று காண்பிப்பதற்காகவே அந்த முன்மொழிதல் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பவுல் செயல்விளைவில் பின்வருமாறு கூறி, அவர்களின் விவாதத்திற்குப் பதில் அளிக்கிறார்: “இல்லை, ஏனெனில் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நாம் இனியும் பாவத்தில் வாழலாம் என்பது பொருத்தமானதாக இருப்பதில்லை … பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?” (ரோமர் 6:2).

பவுல் பதில் அளிக்கும் இன்னொரு விவாதம் பின்வருமாறு: “நீங்கள்

கூறுகிறபடி, நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் இல்லை என்றால் [ரோமர் 6:14], பாவத்தைத் தவிர்ப்பதற்கான எந்தப் பொறுப்பில் இருந்தும் நாம் விடுவிக்கப்பட்டு இருக்கிறோம்.'' "... நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா?" (ரோமர் 6:15). "கூடாதே, நமது விடுதலையானது பொறுப்பை உள்ளடக்கி இருப்பதால், நாம் தொடர்ந்து பாவத்திற்கு ஊழியம் செய்தால், நாம் விடுதலையானவர்களாக அல்ல; ஆனால் பவாத்தின் கட்டிலேயே இருக்கிறோம்'' என்று பவுல் பதில் அளிக்கிறார்.

இவ்வாறாக, கிறிஸ்தவர்கள் மாற்றப்பட்ட ஒரு வாழ்வை நடத்த வேண்டும் என்பதே இந்த அதிகாரத்தின் பிரதான நடைமுறை வலியுறுத்த மாக உள்ளது. கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக் கூடாது, ஆனால் மாற்றப்பட்ட வாழ்வை வாழவேண்டும் என்பது ஏன் என்பதற்கு, நம்பி இணங்கக்கூடிய பல காரணங்களைப் பவுல் அளிக்கிறார்: (1) கிறிஸ்தவர் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருப்பதால், அவர் பாவம் செய்யக்கூடாது (ரோமர் 6:2, 9-11). நாம், குற்ற உணர்வு, வற்புறுத்துதல்கள் மற்றும் பாவத்தின் அதி காரம் ஆகியவற்றில் இருந்து விடுதலையாகி இருக்கிறோம். நிச்சயமாகவே நாம் இனியும் பாவத்தில் தொடர்ந்திருந்து அதினால் அதன் அடிமைத்தனைக்கு மீண்டும் திரும்பிவிடக் கூடாது. (2) கிறிஸ்தவர் ஒரு புதிய வாழ்வை வாழ்வதால் அவர் பாவம் செய்யக்கூடாது (ரோமர் 6:4). மாற்றம் ஏற்பட்டுள்ளது; அவர் மறு படியும் பிறந்திருக்கிறார். ஒரு புதிய வாழ்வு புதிய தர அளவைகளுக்கு அழைக்கிறது. (3) கிறிஸ்தவர் இப்போது தேவனுடைய ஊழியக்காரராக, தேவனுக்கு அடிமையாக இருப்பதால், அவர் பாவம் செய்யக்கூடாது (ரோமர் 6:18). ஆகையால், அவர் தேவனைச் சேவிக்கவும் தேவனுக்குக் கீழ்ப்படியவும் ஒரு கடமையைக் கொண்டுள்ளார். (4) கிறிஸ்தவர் பாவம் செய்தால் அவர் அழிந்துபோவார் என்பதால் அவர் பாவம் செய்யக்கூடாது (ரோமர் 6:21-23).

## முடிவுரை

என்றால், மறு உருவாக்கப்பட்ட நபர் எவ்வாறு வாழ வேண்டும்? இரு ஆணைகள் இதைத் தொகுத்துரைக்கின்றன:

*முதலாவது*, "ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதி ருப்பதாக" (ரோமர் 6:12; cf. 6:13). கிறிஸ்தவர், தமது வாழ்வை யார் அல்லது எது கட்டுப்படுத்தும் என்பதைக் கூறும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அவர் பாவத்தினால் கட்டுப்படுத்தப் படாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் அவரது பொறுப்பாக உள்ளது. உங்களேயே நீங்கள் தீவிரமாக, எச்சரிக்கையாக, மனச்சாட்சிப் பூர்வமாகப் பின்வருமாறு கேட்டுக்கொள்ளுங்கள்: "எனது சரீரத் தின் மேல் ஆட்சிசெய்வது யார் - அல்லது - எது? கர்த்தர் என்னை இயக்குகிறாரா? அல்லது பாவம் என்மீது ஆளுகை செய்து எனது செயல்களைக் கட்டளையிடுகிறதா?"

*இரண்டாவது*, "நீங்கள் ... உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக் கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'' (ரோமர் 6:13; 6:19ஐயும் காணவும்). எதிர்மறையாக நாம், பாவத்தின் அபாய அறிவிப்புப் பாடலை எதி

*ர்த்து நிற்க வேண்டும். ஆனால் அது போதுமானதாக இருப்ப தில்லை. ஒரு நேர்ம றையான நிலைக் கருத்தின்படி, நாம் நம்மை முழுவதும் கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டும். "எந்தன் ஜீவன் இயேசுவே சொந்தமாக ஆளுமே" என்ற பாடல் இதை நன்கு விளக்குகிறது:*

*என்தன் ஜீவன், இயேசுவே,*
*சொந்தமாக ஆளுமே;*
*எந்தன் காலம் நேரமும்*
*நீர் கையாடியருளும்.*

*என்தன் சித்தம், இயேசுவே,*
*ஒப்புவித்துவிட்டேனே;*
*என்தன் நெஞ்சில் தங்குவீர்,*
*அதை நித்தம் ஆளுவீர்.*

*திருப்பாதம் பற்றினேன்;*
*என்தன் நேசம் ஊற்றினேன்;*
*என்னையே சமூலமாய்*
*தத்தம்செய்தேன் நித்தமாய்.*

*மாபெரும் மறு உருவாக்கம் என்பது மாற்றப்பட்ட வாழ்வை விளைவிக்கும் என்றால் அது நிறைவில் நித்திய ஜீவனை விளைவிக்கும். ரோமர் 6:23, "பாவத் தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" என்று கூறுகிறது. நித்திய ஜீவன் என்பது ஒரு வரமாக உள்ளது; அது கிருபையினாலே கிடைப்பதாக உள்ளது. இருப்பினும், ஒரு கிறிஸ்தவர் தமது வாழ்வை மாற்ற மறுத்து உலகத்தை நோக்கிப் பின்னாகத் திரும்பிச் செல்வார் என்றால், மரணமே விளைவாகிறது. (காண்க 2 பேதுரு 2:20.)*

*நீங்கள், உங்கள் "பழைய மனுஷனால்" களைப்படைந்து இருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் உங்களேயே மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்தி ருக்கலாம். நீங்கள் சுய - முன்னேற்றப் புத்தகங்களில் முயற்சி செய்திருக் கிறீர்களா? ஒரு "புதியசாயலை" உருவாக்க முயற்சித்திருக்கிறீர்களா? ஒரு மேம் பட்ட வாழ்வுப்பாணி, ஒரு அதிக ஆரோக்கியம் நிறைந்த உணவுப்பழக்கம், பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ள முயற்சித்து இருக்கிறீர்களா? ஒருவேளை உடல்ரீதியான மாற்றங்களுக்குக் கூட முயற்சித்து இருக்கிறீர்களா?*

*"வயிற்றைச் சுருக்குதல்," "மூக்கைச் சீர்திருத்தும்பணி," அல்லது "முக ஒப்பனை," ஆகியவற்றிற்குப் பதிலாக, மறு உருவாக்கப்படுதல் என்பதே உங்களுக்குத் தேவையாக உள்ளது! உங்கள் "பழைய மனுஷனை" களைந்து போட்டு கிறிஸ்துவுக்குள் ஒரு "புதிய மனுஷன்" ஆகுங்கள்! இயேசுவை விசுவாசியுங்கள், உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புகள், மற்றும் பாவ மன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்! நீங்கள் ஒரு புதிய நபராவீர்கள், மரித்திருத்தல் என்பதற்குப் பதில் பிழைத் திருப்பீர்கள், பாவத்தின் அடிமை என்பதற்கு மாறாக நீதிக்கு அடிமை*

*யாயிருப்பீர்கள், மறுபடியும் பிறந்திருப்பீர்கள், தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய பிள்ளையாயிருப்பீர்கள். அப்போது நீங்கள் உங்கள் எஜமானர் விரும்புகிற வகையிலான மாற்றப்பட்ட வாழ்வை வாழ்வீர்கள், மற்றும் நித்திய ஜீவன் என்பது உங்களுக்கு வெகுமதியாகக் கிடைக்கும், அது தேவனுடன் என்றென்றைக்கும் பரலோகத்தில் இருக்கக் கூடிய ஒரு இல்லமாகும்!*